**முதன்மை மாவட்ட நீதிமன்றம், கடலூர்மாவட்டம், கடலூர்.**

**முன்னிலை : திரு. S. ஜவகர், B.L.,**

**முதன்மை மாவட்ட நீதிபதி, கடலூர்.**

**2024-ஆம் ஆண்டு, டிசம்பர் மாதம் 5-ஆம் நாள் வியாழக் கிழமை**

**E.A.No.27/2024 in E.P.No.189/2022 in O.S.No.93/2019**

1. குமாரவேல்
2. சதீஷ் குமார்
3. வேல்முருகன் .. மனுதாரர்கள்/ மனுதாரர்கள்/ வாதிகள் மற்றும் 1-ஆம் பிரதிவாதி

/எதிராக/

வட்டாட்சியர்,
புவனகிரி,
புவனகிரி தாலுக்கா .. எதிர்மனுதாரர்/எதிர்மனுதாரர்

இம்மனுவானது என் முன்பு 04.12.2024 அன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.ஆர். குருராஜ் அவர்களும், எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த அரசு வழக்கறிஞர் திரு.கே.இராமன் அவர்களும் முன்னிலையாகியும், இருதரப்பு வாதுரைகள் கேட்கப்பட்டும், வழக்கு ஆவணங்களளைப் பரிசீலனை செய்தும், இதுநாள் வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையிலிருந்து வந்த இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் பின்வருமாறு வழங்கும்

**உத்தரவு**

மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள ஆவணத்தை தாக்கல் செய்வதில் ஏதேனும் காலதாமதம் ஏற்பட்டிருந்தால், மேற்படி காலதாமதத்தை மன்னித்து, மேற்படி ஆவணத்தை பெற்றுக்கொள்ள உத்தரவிடக் கோரி, மனுதாரர்கள், உரிமையியல் விசாரணை முறைச்சட்டம் கட்டளை-7 விதி-14(3) -ன் கீழ் இம்மனுவை தாக்கல் செய்துள்ளனர்.

<u>**மனுவின் சுருக்கம் பின்வருமாறு**</u> :

2. இம்மனுதாரர், இம்மனுவில் 2-ஆம் மனுதாரர் மற்றும் அசல் வழக்கில் 2-ஆம் வாதி. 1-ஆம் மனுதாரர், இந்த மனுதாரரின் சகோதரர். 3-ஆம் மனுதாரர் ஒரு பாகஸ்தர். இம்மனுவினை இம்மனுதாரர் தனக்காகவும் மற்ற மனுதாரர்களுக்காகவும் சேர்த்து தாக்கல் செய்துள்ளார். மனுதாரர்கள் தனித்த சுவாதீனத்துடன் கூடிய பாகத்திற்காகவும், வருவாய் ஆவணங்களை தங்கள் பெயருக்கு மாற்றவும் மேற்படி அசல் வழக்கினை தாக்கல் செய்தனர். மேற்படி அசல் வழக்கானது, கோரியபடி தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டது. மேலும், இந்த எதிர்மனுதாரருக்கு வருவாய் ஆவணங்களை மாற்ற உத்தரவிட்டு தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டது. மனுதாரர்கள், எதிர்மனுதாரரை பலமுறை அணுகி, வருவாய் ஆவணங்களை மாற்றக் கோரியும், எதிர்மனுதாரர், வருவாய் ஆவணங்கள் மனுதாரர்கள் பெயருக்கு மாற்ற முன்வரவில்லை. எனவே, நீதிமன்ற அவமதிப்பிற்காக மேற்படி நிறைவேற்றுகை மனுவினை மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ளனர். எதிர்மனுதாரர், எதிருரை தாக்கல் செய்துள்ளார். எதிர்மனுதாரர், இந்நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பாணையை கருத்தில் கொள்ளாமலும், நீதிமன்ற உத்தரவினை மதிக்காமலும், நீதிமன்றத்திற்கு இணையாக விசாரணை நடத்த நடவடிக்கையை எடுத்துக் கொண்டிருக்கிறார். மனுதாரர்களை, அறநிலையத் துறையிடமிருந்து "No Objection" தடையில்லா சான்று வாங்கி வரும்படி கூறினர். இந்நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பாணைக்கு எதிராக எதிர்மனுதாரர் இதுபோன்ற உத்தரவுகளை பிறப்பிக்கிறார். மேலும், எதிர்மனுதாரர் அவராகவே, 03.11.2008 ந்தேதியிட்ட பாகப்பிரிவினை பத்திரம் 09.11.2008 அன்று பதிவு செய்யப்பட்டதாக கூறுகிறார். எனினும், எதிர்மனுதாரர் ஆவணத்தை தாக்கல் செய்யவில்லை. மனுதாரர்கள், சான்றளிக்கப்பட்ட ஆவணத்தை பெற்றுள்ளனர். அந்த ஆவணத்தை தாக்கல் செய்யவேண்டிய அவசியம் இப்போது எழுந்துள்ளது. ஆவணம்

தாக்கல் செய்வதில் காலதாமதம் எதுவும் ஏற்படவில்லை. எனினும், நீதிமன்றம் காலதாமதமாக ஆவணத்தை தாக்கல் செய்வதாக உணர்ந்தால், ஆவணம் தாக்கல் செய்வதில் ஏற்பட்ட காலதாமதத்தை மன்னித்து, ஆவணத்தை பெற்றுக்கொள்ள வேண்டும். மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள ஆவணத்தை பெற்றுக்கொள்ளாவிட்டால், மனுதாரர்களுக்கு ஈடு செய்யமுடியாத நஷ்டமும், கஷ்டமும் ஏற்படும். எதிர்மனுதாரர் ஆவணத்தை பெற்றுக்கொள்வதை ஆட்சேபணை செய்ய முடியாது. எனவே, மனுப்படி உத்தரவாக வேண்டுமாய் மனுதாரர்கள் பிரார்த்திக்கிறார்கள்.

3. **<u>எதிர்மனுதாரர் தரப்பு எதிருரையின் சுருக்கம்</u>** :

ஆவணங்களை காலதாமதத்துடன் தாக்கல் செய்வதை மன்னிக்கக்கோரி மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவானது, நியாயமற்றது மற்றும் மோசமானது. மனுதாரர் காலதாமதமாக ஆவணத்தை தாக்கல் செய்வதற்கான காரணத்தை கூறவில்லை. உண்மையில், மனுதாரர், அசல் வழக்கு எண்.93/2019-ல் ஒருதலைபட்சத் தீர்ப்பாணையை பெற்றுள்ளார். ஒருதலைபட்சத் தீர்ப்பாணையின் அடிப்படையில் மனுதாரர் இந்த எதிர்மனுதாரருக்கு எதிராக இந்த நிறைவேற்றுகை மனுவினை தாக்கல் செய்துள்ளார். மனுதாரர், தாவா சொத்துக்களில் அவருக்குரிய தனித்த சுவாதீனத்துடன் கூடிய 1/2 பாகத்திற்காகவும், வருவாய் ஆவணங்களை வாதிகள் மற்றும் 1-ஆம் பிரதிவாதியின் பெயரில் மாற்றவும் மேற்படி அசல் வழக்கினை தாக்கல் செய்தார். மேற்படி அசல் வழக்கானது பாகத்திற்காக தாக்கல் செய்யப்பட்டதால், இந்த எதிர்மனுதாரர் மேற்படி அசல் வழக்கில் எதிர்கட்சி செய்யவில்லை. இந்த எதிர்மனுதாரர் மேற்படி அசல் வழக்கில் தோன்றாத் தரப்பினராக கருதப்பட்டார். இந்நிலையில், மனுதாரர், பட்டாவில் பெயர் மாற்றம் செய்யக்கோரி மனு ஒன்றை கொடுத்தார். இந்த எதிர்மனுதாரர், அந்த மனுவினை பெற்று, மனு சம்மந்தமாக விசாரணை செய்ததில், சொத்தானது, அருள்மிகு கந்தசஷ்டி கவசம்

திருவிழா மானியம், குறிஞ்சிப்பாடி என்ற பெயரில் இருப்பது தெரிய வந்தது. எனவே, மனுதாரரின் மனுவானது நிராகரிக்கப்பட்டது. மேலும், மேற்படி கோயிலை மேற்படி அசல் வழக்கில் ஒரு தரப்பினராக சேர்க்கப்படவில்லை. மனுதாரர், மேற்படி அசல் வழக்கில் மேற்சொன்ன அருள்மிகு கந்தசஷ்டி கவசம் திருவிழா மானியம், குறிஞ்சிப்பாடி என்பவற்றை தரப்பினராக சேர்க்காமல் அவருடைய குடும்பத்தாருடன் கூட்டு சேர்ந்து தீர்ப்பாணை பெற்றுள்ளார். எனவே, மனுவானது தள்ளுபடி செய்யப்பட வேண்டும். எனவே, இந்த மனுவினை செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்யப்பட வேண்டுமாய் பிரார்த்திக்கப்படுகிறது.

4. இம்மனுவானது அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதே இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனையாகும்.

5. மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள ஆவணத்தை தாக்கல் செய்வதில் ஏதேனும் காலதாமதம் ஏற்பட்டிருந்தால், மேற்படி காலதாமதத்தை மன்னித்து, மேற்படி ஆவணத்தை பெற்றுக்கொள்ள உத்தரவிடக் கோரி, மனுதாரர்கள் இம்மனுவை தாக்கல் செய்துள்ளனர். மனுதாரர்கள் தரப்பில், மனுவின் சாராம்சத்தை ஒத்திசைந்து வாதுரை புரிந்து மனுப்படி உத்தரவாக வேண்டுமாய் பிராரத்திக்கப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர் தரப்பில் எதிருரையின் சாராம்சத்தை ஒத்திசைந்து மனுவினை செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்யப்பட வேண்டுமாய் பிரார்த்திக்கப்பட்டுள்ளது. இருதரப்பு வாதுரைகள் கேட்கப்பட்டன. வழக்கு ஆவணங்கள் மற்றும் இம்மனுவுடன் தாக்கல் செய்யப்பட்ட பாகப்பிரிவினை பத்திரத்தின் சான்றளிக்கப்பட்ட நகல் ஆகியவற்றை பரிசீலனை செய்யப்பட்டன. இம்மனுவின் மீது எதிர்மனுதாரர் தரப்பில் ஆட்சேபணை தெரிவிக்கப்பட்டிருந்த போதிலும், மேற்படி நிறைவேற்றுகை மனுவானது, எதிர்மனுதாரருக்கு எதிராக நீதிமன்ற அவமதிப்பின்பேரில் தாக்கல் செய்யப்பட்டுள்ளதால், வழக்கின் தன்மை மற்றும் சூழ்நிலைகளை கருத்தில்

கொண்டு, இம்மனுவானது அனுமதிக்கத்தக்கது என்று தீர்மானித்து இவ்வாறாக இந்த மனுவில் பிரச்சனைக்குத் தீர்வுக் காணப்படுகிறது.

6. முடிவாக, இம்மனுவை அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

இந்த உத்தரவானது என்னால் சுருக்கெழுத்துத் தட்டச்சருக்கு நேரிடையாக உரைக்கப்பட்டு, அவரால் நேரிடையாகக் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டதை என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு, இன்று 2024-ஆம் ஆண்டு, டிசம்பர் மாதம் 5-ஆம் நாள் இத்திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறிய பகரப்பட்டது.

JAWAHAR SIGAMANI
Digitally signed by JAWAHAR SIGAMANI
Date: 2024.12.05 16:36:16 +0530

முதன்மை மாவட்ட நீதிபதி,

கடலூர்.

**இணைப்பு** :

**மனுதாரர்கள் மற்றும் எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணம்** : இல்லை

JAWAHAR SIGAMANI
Digitally signed by JAWAHAR SIGAMANI
Date: 2024.12.05 16:36:24 +0530

முதன்மை மாவட்ட நீதிபதி,

கடலூர்.